# உடன்பிறப்பே... 13

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்வோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த இளம்வழுதி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

## இளம்வழுதி : திராவிட அரசியல் தழுவிய இளவரசன்



ஓவியம் : ரவி பேலட்

*"ஏ தமிழ்நாடே! ஏ தாழ்ந்த தமிழ் நாடே! தேய்ந்த தமிழ்நாடே! தன்னை மறந்த தமிழ்நாடே! தன்மானமற்ற தமிழ் நாடே! சோர்வுற்ற தமிழ்நாடே! வீறுகொண்டெழு! உண்மைக் கவிகளைப் போற்று! உயிர்க் கவிகளைப் போற்று! உணர்ச்சிக் கவிகளைப்போற்று! புரட்சிக் கவிகளைப் போற்று!! புத்துலகச் சிற்பிகளைப் போற்று!!!" என 1945 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைத்து* **"ஏ தாழ்ந்த தமிழகமே!"** *எனும் தனது உரையை நிகழ்த்திக் கொண்டிருந்தார் பேரறிஞர் அண்ணா. தமிழ்ச் சமூகம் அப்படி ஒரு ஆகச்சிறந்த உரையை அதுவரை கேட்டதில்லை.*

*அண்ணா அந்த உரையை நிகழ்த்துவதற்கு முன், "இவர்தான் புரட்சியின் சிகரம்" என அண்ணாவை மாணவர்கள் முன் அறிமுகப்படுத்தி வைத்தவர் தண்டபாணி எனும் இருபத்தி இரண்டு வயது மாணவர்.*

*திராவிட இயக்க வரலாற்றில் தண்டபாணியை தெரியாமல் இருக்கலாம். ஆனால் 'கடலூர் இளம்வழுதி'யை அறியாதவர் இருக்க முடியாது. தண்டபாணி எனும் பெயர் கொண்ட இளைஞனை, திராவிட இயக்கத்தின் கொள்கைகள் ஆரத்தழுவி 'இளம்வழுதி' எனப் பெயர் சூட்டியது. அந்த இளம்வழுதியே தன் இளமைப் பருவம் தொட்டு இயக்கக் கொள்கைகளை தென் ஆற்காடு மாவட்டம் முழுவதும் கொண்டு சென்று கழகத்தை வளர்த்தெடுத்தார்.*

### கல்லூரிக் காலத்திலேயே கொள்கை வீரர்

*அண்ணா தனது பேச்சாலும் எழுத்தாலும் தன் தம்பிகளைத் தொண்டர்களாக மட்டும் உருவாக்கிடவில்லை. களம் பல கண்டு, வெற்றி கொள்ளும் தலைவர்களாக உருவாக்கினார். அந்தத் தலைவர்களின் வரிசையில் கடலூரில் கழகம் வளர்த்த கலைஞரின் உடன்பிறப்பு இளம்வழுதி.*

*1923 ஆம் ஆண்டு அண்ணா பிறந்த நாளுக்கு அடுத்த நாளான செப்டம்பர் 16-ம் தேதி, அன்றைய தென் ஆற்காடு மாவட்டத்தில் கடலூரில் இரெங்கசாமி-சவுந்திரம் அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார் இளம்வழுதி. சிறுவயதிலே வாசிப்பின் மூலம் கிடைத்த பெரியார்-அண்ணாவின் அறிமுகம், தண்டபாணியை திராவிட இயக்கப் பற்றாளராக மாற்றி, தன் நண்பர்களுடன் இணைந்து பெரியாரின் கொள்கைகளை வாழ்நாள் முழுவதும் முழங்க வைத்தது.*

*கல்லூரிப் படிப்பை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தொடங்கினார். அன்றைய அண்ணாமலைப் பல்கலைக்கழகம், திராவிட இயக்கத்தின் பல கொள்கை மலைகளைப் பட்டை தீட்டிய பாசறையாக இருந்தது. அது அரசியல் ஆர்வமிக்க இளம்வழுதி எனும் இளைஞனை தீரம்மிக்க செயல் வீரராக மாற்றியது. கொள்கைக் கருவூலம் பேராசிரியர், பேச்சில் சிறந்த நாவலர் எல்லாம் இளம்வழுதிக்கு கல்லூரித் தோழர்கள். கல்லூரியில் தொடங்கிய அந்தக் கொள்கை நட்பு, கழகப் பணி தொடங்கி மக்கள் பணி வரை அழியாமல் நீண்டது.*

### கருப்பு இளவரசர்

*கல்லூரிப் பருவம் தொட்டே தன்னுடைய எழுத்தாலும், பேச்சாலும் இளைஞர்களைக் கவரக்கூடியவராகத் திகழ்ந்தார் இளம்வழுதி. அதனாலேயே அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவரின் செல்வாக்கு உச்சம் தொட்டு நின்றது. தலைவர்களை அழைத்து வந்து கூட்டங்களை நடத்தி, மாணவர்களை அரசியல் மயப்படுத்தி போராட்டக் களம் நோக்கி அழைத்து வரும் பணிகளையும் விடாமல் தொடர்ந்தார் இளம்வழுதி.*

*இளம்வழுதி அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திராவிடர் கழக மாணவர் அமைப்புக்குச் செயலாளராக இருந்தவர். அவரின் செயல்பாட்டையும் செல்வாக்கையும் பார்த்த அண்ணா, இளம்வழுதியை "BLACK PRINCE OF ANNAMALAI" (அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கருப்பு இளவரசன்) என்று பெயரிட்டு அன்போடு அழைத்தார். அதனைத் தொடர்ந்து தன்னுடைய சட்டப் படிப்பை சென்னை சட்டக் கல்லூரியில் முடித்து வழக்கறிஞராகவும் பதிவு செய்துகொண்டார்.*


*அண்ணாவிடம் பாராட்டுப் பெற்றவர்கள், இயக்கப் பணிகளில் சாதித்ததுதான் வரலாறு. அதை இளம்வழுதியும் தொடர்ந்தார். வழக்கறிஞராகத் தொழிலை ஏற்றபோதும், தன்னலத்துடன் செயலாற்றாமல், கழகத்தின் பல்வேறு வழக்குகளை ஏற்று நடத்தி சட்டப் போராட்டங்கள் பலவற்றை மேற்கொண்டார். தூத்துக்குடியில் கழகம் வளர்த்த மாவீரன் கே.வி.கே.சாமி மீது போடப்பட்ட வழக்கில் அவரது சார்பாக கழகத் தலைமையின் கட்டளையை ஏற்று வாதாடியவர் இளம்வழுதிதான்.*

### உயிரைத் துச்சமாக நினைத்து பிரச்சாரம்

*தி.மு.க. தொடங்கிய நாளிலிருந்து பல்வேறு பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட்டவர். கழகம் ஆட்சியைக் கைப்பற்றிய 1967-ஆம் ஆண்டு தேர்தலில் அண்ணாவால் கடலூர் சட்டமன்றத் தொகுதியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். கொள்கைகள், மாணவர்களின் ஆதரவு என எல்லாம் இருந்தும் தி.மு.க.வுக்குத் தேர்தல் களம் அவ்வளவு எளிதாக அமைந்துவிடவில்லை. அன்றைய ஆட்சியாளர் தோல்வி பயத்தில் பல இடங்களில் கொலை வெறித் தாக்குதல்களை நடத்தினர்.*

*1967 தேர்தல் களத்தில் மதுரை-இராமநாதபுரம் மாவட்டங்களுக்குத் தேர்தல் பிரச்சாரம் முடித்து சென்னை திரும்பும் வழியில் கடலூரில் தன்னுடைய அருமை நண்பர் இளம்வழுதிக்கு வாக்குசேகரிக்க வந்தார் கலைஞர். நான்கு ஐந்து கார்களில் வந்த குண்டர்கள் "கருணாநிதியே திரும்பிப் போ, இல்லையேல் வெட்டுவோம், குத்துவோம்" என்றனர்.*

*நெருப்பாறுகள் பலவற்றில் எதிர்நீச்சலிட்ட கலைஞர், அந்தக் கூச்சலுக்கு எல்லாம் பயந்திடவில்லை. கொலை முயற்சிகள் எல்லாம் நிழலெனத் தொடர்ந்த போதும் நெஞ்சம் குலைந்திடாமல் தன் அருமை நண்பர் இளம்வழுதிக்கு வாக்குச் சேகரித்துக் கழகப் பணியை ஆற்றினார் கலைஞர். அந்தத் தேர்தல் இளம்வழுதிக்கு வெற்றியைத் தந்தது.*



### இளமையில் தலைமை

*1966-ல் பொள்ளாச்சியில் நடந்த கோவை மாவட்ட மாநாட்டில் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் சிறப்பித்தார். கன்னியாகுமரி மாவட்ட மாநாடு நாகர்கோயிலில் நடைபெற்ற போதும் அந்த மாநாட்டுத் தலைமைப் பொறுப்பை ஏற்றவர்.*

*எழுத்துப் பணிகளையும் தொய்வில்லாமல் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தார் இளம்வழுதி. 'முரசொலி', 'திராவிட நாடு', 'முத்தாரம்' ஆகிய இதழ்களில் கட்டுரைகள் எழுதி வந்தார். 'பொன்மொழி' என்ற இதழையும் தன் வாழ்வின் இறுதிக் காலத்தில் தொடங்கி நடத்தினார்.*

*கொள்கைகளைப் பரப்புவதற்காக நாடகங்களை திராவிட இயக்கம் கையாண்ட போது, நாடகப் பணிகளிலும் தன்னை இணைத்துக்கொண்டார். அறிஞர் அண்ணாவின் 'சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்' நாடகத்தில் சிவாஜி வேடத்தில், தென் ஆற்காடு மாவட்ட மாநாட்டில் நடித்திருக்கிறார். கலைஞரின் 'நல்ல தீர்ப்பு' நாடகத்திலும் பங்கேற்றுத் தன் கலையார்வத்தை வெளிப்படுத்தி இயக்கக் கொள்கைகளைப் பாமர மக்களிடையே கொண்டு சேர்த்திருக்கிறார்.*

*கொள்கைமிகு செயல் வீரராகப் பணியாற்றி வந்த இளம்வழுதி, 1970 அக்டோபர் 22 ஆம் தேதி இயற்கை எய்தினார். திருச்சியில் கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் செல்லும் வழியில் செய்தி கேட்டு, அனைத்து நிகழ்ச்சிகளையும் ரத்து செய்து விட்டு தன் அருமை நண்பரின் இறுதி ஊர்வலத்தில் இறுதி வரை கலந்துகொண்டு விடைகொடுத்தார் கலைஞர். இயக்கத்தின் கொள்கைப் பாய்ச்சலோடு உலாவிய அந்த 'கருப்பு இளவரச'ரின் கழகப் பணி என்றும் நிலைத்திருக்கும்.*

**...துடிக்கும்**

## உடையும் குஜராத் பாலங்கள்!

50 ஆண்டுகளாகியும் இப்போதுதான் கட்டப்பட்டது போல கம்பீரமாகவும் உறுதியாகவும் இருக்கிறது, கலைஞர் கட்டிய அண்ணா மேம்பாலம். ஆனால் குஜராத்தில் முந்தைய நாள் கட்டிய பாலங்கள் எல்லாம், அடுத்த நாளே உடைந்து போகின்றன. சமீபத்தில் அம்மாநில முதலமைச்சர் திறந்து வைத்த சூரத் பாலத்தில், திறப்பு விழா கண்ட அடுத்த சில நாட்களிலேயே விரிசல்கள் விழ ஆரம்பித்துள்ளன. அதை வீடியோவாக எடுத்துப் போட்டு, 'இதுதான் ரியல் குஜராத் மாடல்' என்று அம்மாநில நெட்டிசன்களே குஜராத்துக்குப் புகழ் மாலை சூட்டுகிறார்கள்.

இந்த ஒரு பாலம் மட்டும்தான் என்றில்லை. கடந்த மாதம் பிபார்ஜாய் புயலின்போது, மிண்டோலா நதியின் மீது கட்டப்பட்ட பாலம், திறப்பு விழா காணும் முன்னமே இடிந்து விழுந்திருக்கிறது. அதேபோல, ஹத்கேஷ்வர் பாலம், கட்டப்பட்ட நான்கு ஆண்டுகளுக்குள் மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்றது அல்ல என்று தெரியவந்து, அந்தப் பாலத்தைக் கட்டிய இரண்டு தனியார் நிறுவனங்கள் மீது இந்த ஆண்டு ஏப்ரலில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2016 முதல் இப்படி 12க்கும் அதிகமான பாலங்கள் இடிந்து விழுந்திருக்கின்றன. இதற்கெல்லாம் முக்கியக் காரணம், பொதுக் கட்டமைப்புகளை ஏற்படுத்துவதில் நடைபெறும் ஊழல்தான் என்கிறார்கள் அம்மாநில அரசின் முன்னாள் அதிகாரிகள். இந்த லட்சணத்தில்தான் 'திராவிட மாடலை' குறை கூற ஒரு கூட்டம் அலைந்து கொண்டிருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்





சேகர்

### கலைஞர் படை!

1992 -ஆம் ஆண்டு, கொடூர சர்வாதிகார ஆட்சியை நடத்திக் கொண்டிருந்தார் ஜெயலலிதா. தலைவர் கலைஞருக்கு அளிக்கப்பட்டு வந்த காவல்துறை பாதுகாப்பினை அளிக்க மறுத்து அராஜகம் செய்தார். இதனால், தலைவர் கலைஞர் அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக, ஒருங்கிணைந்த மதுரை மாவட்டச் செயலாளர் அண்ணன் பொன்.முத்துராமலிங்கம் அவர்கள், 'கலைஞர் பாதுகாப்புத் தொண்டர் படை' என்ற பெயரில் இராணுவச் சீருடையில் ஒரு பாதுகாப்பு அமைப்பை ஏற்படுத்தினார். 1996 ஆம் ஆண்டு வரை இந்த அமைப்பு செயல்பட்டது. தலைவர் மதுரை வரும்போதெல்லாம் நாங்கள் அவருக்குத் துணையாக உடன் செல்வோம். அப்படியான தருணத்தில் தலைவருடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது.

**-பி. வி. எஸ். சேகர், விவசாய அணி துணை அமைப்பாளர், மதுரை மாநகர் வடக்கு**

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகக் கொடி வாரம்!

**1966 -ஆம் ஆண்டு, தேர்தல் நிதி திரட்டுவதற்காக, 'கழகக் கொடி வாரம்' கொண்டாடப்பட்டது. உதயசூரியன் சின்னம், அண்ணாவின் உருவம் பதிக்கப்பட்ட கொடி வில்லைகள் ஆயிரக் கணக்கில் தயாரிக்கப்பட்டன. அவற்றின் விற்பனை மற்றும் அதன் மூலம் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்திட, கழக முன்னணியினர் தமிழ்நாட்டு மூலைமுடுக்கெல்லாம் பயணம் செய்தனர். பிப்ரவரி 20- ஆம் தேதி முதல் 27- ஆம் தேதி வரை அந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அந்தக் கொடி வாரத்துக்காக நெல்லை, மதுரை, கோவை, சேலம் என பல இடங்களுக்கும் பயணப்பட்டார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 172




**எழுத்து : கோவி.லெனின்**
**ஓவியம் : கி.சொக்கலிங்கம்**

**-வாழ்வோம்**

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131